பக்கங்கள் 14+ 03

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆவணி 06 வெள்ளிக்கிழமை 22.08.2024 | அதிர்வு 22

## அடுத்த மாதம் இரத்தாகும் பயங்கரவாதத் தடைச் சட்டம்


**நாடாளுமன்றில் அரசு அறிவிப்பு**



பயங்கரவாதத் தடைச் சட்டம் எதிர் வரும் செப்டெம்பர் மாத முற்பகுதிக்குள் இரத்துச் செய் 04

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# ரணில் கைது!

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவைக் குற்றப் புலனாய்வுத் திணைக் களத்தின் அதிகாரிகள் இன்று கைது செய்தனர்.

அவர் கொழும்பு, கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ள நிலையில், அவரின் பிணைக் கோரிக் கையை நீதிவான் பரிசீலித்து வருகின் றார்.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக இருந்த காலத்தில், தனது மனைவியான பேராசிரியர் மைத்ரி விக்கிரமசிங்க வின் பட்டமளிப்பு விழாவில் கலந்து கொள்வதற்காக இலண்டனுக்குத் 04





## தமிழ் ஊடகர்களுக்கு எதிரான அநுர அரசின் அடக்குமுறையைக் கண்டித்துப் போராட்டம்

தமிழ் ஊடகவியலாளர்களுக்கு எதிரான அநுர அரசின் அடக்கு முறையைக் கண்டித்து நாடாளுமன்றச் சுற்றுவட்டத்துக்கு முன்பாக இன்று முற்பகல் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தை ஊடக ஊழியர் தொழிற்சங்கச் சம்மேளனம் மற்றும் இளம் ஊடகவியலாளர் சங்கம் 04



# யாழ். நகரில் இன்று 30 துப்பாக்கிகள் மீட்பு!

**(ந.லோகதயாளன்)**

யாழ்ப்பாணம், கொட்டடிப் பகுதியில் உள்ள வீட்டு வளவில் இருந்து 30 துப்பாக்கிகளைப் பொலிஸார் இன்று மீட்டுள்ளனர்.

கொட்டடியில் உள்ள ஒரு காணியின் மதில் அமைப்பதற்காக வெட்டப்பட்ட குழியில் இருந்து வெளிவந்த மர்மப் பொருள் தொடர்பில் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது.

இந்த விடயத்தைப் பொலிஸார், நீதிவானின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.

இதையடுத்து நீதிவான் முன்னிலையில் விசேட அதிரடிப் படையினரால் சந்தேகத்துக்கிடமான பொருள்கள் இன்று மீட்கப்பட்டன.

இவ்வாறு மீட்கப்பட்ட பொருள்களில் 30 ஏ.கே. ரகத் துப்பாக்கிகள், 6 பொதிகளாக வைக்கப்பட்டு புதைக்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளன.

1,260 ரவைகள் வீதம் 4 பெட்டிகளில் 5 ஆயிரத்து 40 ரவைகளும் இதன் போது மீட்கப்பட்டுள்ளன.

மீட்கப்பட்ட துப்பாக்கிகளில் பல நல்ல நிலையில் காணப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.







# நல்லூரான் தீர்த்தோற்சவம்

யாழ். நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மகோற்சவத்தின் தீர்த்தோற்சவம் இன்று காலை நடைபெற்றது.











# சாமர சம்பத் எம்.பியிடம் 6 மணிநேரம் வாக்குமூலம்

நாடாளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்க, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் சட்டவிரோத சொத்துக்கள் மற்றும் உடமைகள் தொடர்பான விசாரணைப் பிரிவில் முன்னிலையாகிய போது அவரிடம் 6 மணிநேரம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

சாமர சம்பத் தசநாயக்க நேற்று பிற்பகல் 12.30 மணிக்கு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாகிய நிலையில் மாலை 5.30 மணிக்கு அங்கிருந்து வெளியேறினார்.

அவர் நிதி முறைகேடுகள் தொடர்பான விசாரணைகள் தொடர்பில் வாக்குமூலம் வழங்கினார்.



# மன்னார் டிலாசால் கல்லூரியின் 125 ஆவது ஆண்டில் மருத்துவ முகாம்

**(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)**

மன்னார் டிலாசால் கல்லூரியின் நானாட்டான் 125 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இடம்பெறும், சிறப்பு நிகழ்வுகளின் ஒன்றாக இன்று வெள்ளிக்கிழமை (22) சிறப்பு மருத்துவ முகாம் நானாட்டான் டிலாசால் கல்லூரி பாடசாலை வளாகத்தில் இடம்பெற்றது.

பாடசாலை முதல்வர் அருட்சகோதரர் ஏ.மனோரஞ்சிதன் தலைமையில் இந்த மருத்துவ முகாம் இடம்பெற்றது.

இந்த சிறப்பு மருத்துவ முகாம் இந்தப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு 125 ஆவது ஆண்டு நிறைவில் தற்போது கால் பதித்துள்ள நிலையில் இடம் பெற்றது. அதை முன்னிட்டு இதற்கு முன்னரும் பல சிறப்பு நிகழ்வுகள் இடம் பெற்றுள்ளன.

இந்த ஜூபிலி ஆண்டின் சிறப்பு நிகழ்வாக இந்தப் பிரதேச மக்களுக்கான சிறப்பு மருத்துவமுகாம் இடம்பெற்றது.

இந்த மருத்துவ முகாமில் 100 இற்கும் அதிகமான பயனாளர்கள் பங்கு கொண்டு தமது மருத்துவ தேவைகளை நிறைவு செய்திருந்தனர்.

இந்த மருத்துவ முகாமை டிலாசால் கல்லூரிச் சமூகம் அவர்களுடன் இணைந்து பாடசாலை அபிவிருத்தி சங்கம் மற்றும் பாடசாலையின் பழைய மாணவர் சங்கம் ஆகியன இணைந்து முன்னெடுத்தமை குறிப்பிடத்தக்கது.

## அடுத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யப்படும் என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

இன்றைய நாடாளுமன்ற அமர்வில் உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“பயங்கரவாதத் தடைச் சட்டத்தை ஒழிப்பது குறித்து ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி சட்டத்தரணி ரியன்சி அர்சகுலரத்ன தலைமையிலான குழுவின் அறிக்கை அடுத்த மாத தொடக்கத்தில் கிடைக்கும்.

அதற்கமைய பயங்கரவாதத் தடைச் சட்டத்தை ஒழிப்பதற்கான வர்த்தமானி அடுத்த மாத ஆரம்பத்தில் வெளியிடப் படும். நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான புதிய சட்டம், பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்குப் பதிலாக இயற்றப் படும்.” – என்றார்.

## ரணில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனிப்பட்ட விஜயம் செய்வதற்காக அரச நிதியைத் தவறாகப் பயன்படுத்தினார் என்ற குற்றச்சாட்டின் கீழ் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் அதிகாரிகளால் இன்று பிற்பகல் கைது செய்யப்பட்டார்.

பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் அவர் கொழும்பு, கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.

ரணில் தரப்பு சட்டத்தரணிகளின் வாதங்களையடுத்து அவரைப் பிணையில் விடுவிப்பதா, இல்லையா என்று நீதிவான் பரிசீலித்து வருகின்றார்.

## தமிழ் ஊடகர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்பன ஒன்றிணைந்து முன்னெடுத்தன.

முல்லைத்தீவைச் சேர்ந்த சுயாதீன ஊடகவியலாளரான க.குமணனைப் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் கடந்த 17ஆம் திகதி அளம்பில் பொலிஸ் நிலையத்துக்கு வரவழைத்து சுமார் 7 மணி நேரம் கடுமையான விசாரணைக்கு உட்படுத்தியிருந்தனர். இதனைக் கண்டித்தும், தமிழ் ஊடகவியலாளர்களுக்கு எதிரான அநுர அரசின் அடக்குமுறையைக் கண்டித்தும் இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

இந்தப் போராட்டத்தில் ஊடகவியலாளர்கள், சிவில் செயற்பாட்டாளர்கள், சட்டத்தரணிகள் மற்றும் அரசியல் பிரமுகர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# நீரிழிவு எனும் பிணி

தொற்றா நோய்களில் பெரும் பாதிப்பைத் தரும் பிணியாக இருப்பது நீரிழிவு நோயாகும்.

மாற்ற முடியாத - சிகிச்சை மூலம் முழுமையாகக் குணப்படுத்த இயலாத - நோயைப் பிணி என்பார்கள். உடலை விட்டு நீக்க முடியாததாகப் பிணித்திருக்கும் நோயையே பிணி என்றழைப்பர். அந்த வகையைச் சேர்ந்ததுதான் நீரிழிவும்.

இலங்கையின் மேல் மாகாணத்தில் நீரிழிவு நோய் அதிகரித்து வருவது குறித்து சுகாதார நிபுணர்கள் கவலை தெரிவித்துள்ளனர். இந்த மாகாணத்தில் ஐந்து பேரில் ஒருவர் தற்போது இந்நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று புள்ளி விவரங்கள் கூறுகின்றன.

இலங்கை மருத்துவ சங்கத்தின் நிபுணர் டாக்டர் மணில்கா சுமனதிலகவின் கூற்றுப்படி, இந்த நிலைமைக்கு பெரும்பாலும் அதிகப்படியான சர்க்கரை நுகர்வு காரணமாகும்.

சராசரியாக, இலங்கையர்கள் ஆண்டுதோறும் 25 முதல் 30 கிலோகிராம் வரை சர்க்கரையை உட்கொள்கிறார்கள். அதே நேரத்தில் குழந்தைகள் மட்டும் ஒரு நாளைக்கு 20 தேக்கரண்டி சர்க்கரையை உட்கொள்கிறார்கள் என்று அவர் வெளிப்படுத்துகின்றார்.

இலங்கை மருத்துவ சங்கத்தின் கூற்றுப்படி, நீரிழிவு, இதய நோய் மற்றும் உயர் இரத்த அழுத்தம் போன்ற தொற்றா நோய்கள் இப்போது நாட்டில் ஏற்படும் அனைத்து இறப்புகளிலும் எண்பது வீதத்துக்குக் காரணமாகின்றன.

கவலையளிக்கும் விதமாக, குழந்தைகளிடையே கூட இந்த நிலைமைகள் அதிகரித்து வருவதாக மருத்துவர்கள் கூறுகின்றனர்.

எதிர்கால சந்ததியினரைப் பாதுகாக்க உடனடி வாழ்க்கை முறை மாற்றங்களின் அவசியத்தை வலியுறுத்தி, சர்க்கரை மற்றும் உப்பு உள்கொள்ளலைக் குறைக்குமாறு இலங்கை மருத்துவ சங்கம் பொது மக்களை வலியுறுத்தியுள்ளது.

2019 இல் எடுக்கப்பட்ட ஒரு புள்ளி விவர ஆய்வின்படி இலங்கையின் நான்கு பெரியவர்களில் ஒருவருக்கு நீரிழிவு நோய் உள்ளது. உள்ளூர் ஆராய்ச்சியாளர்களின் தேசிய ஆய்வில், ஆசியாவிலேயே இலங்கையில்தான் அதிக நீரிழிவு விகிதம் இருப்பதாக அப்போது கண்டறியப்பட்டுள்ளது.

இலங்கையின் பல பல்கலைக்கழகங்கள், கொழும்பில் உள்ள மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் சுகாதாரக் கொள்கை நிறுவனம் ஆகியவற்றின் ஆராய்ச்சியாளர்களால் 2019 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஒரு பெரிய தேசிய கணக்கெடுப்பின்படி, இலங்கையின் நான்கு பெரியவர்களில் ஒருவருக்கு (23 வீதம்) நீரிழிவு நோய் இருந்தது. மேலும் மூன்றில் ஒருவருக்கு (31 வீதம்) உயர் இரத்த சர்க்கரை அளவு இருந்தது.

நீரிழிவால் பாதிக்கப்பட்டவர்கள் இதயம் தொடர்பான நோய்கள், கை, கால் நரம்புத் தளர்ச்சி, கண்பார்வையில் குறைபாடு போன்ற பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துள்ளனர். இதனால் பாதிப்புகள் அதிகமாகி சிறுநீரகங்களும் செயலிழக்கும் அபாயமும் அதிகம் காணப்படுகின்றது.

மற்றெல்லா நோய்களுக்கும் வெற்றிலை வைத்து அழைக்கும் பிணியாக மாற வல்லது நீரிழிவு நோய்.

சிறு வயது முதலே அந்நோய் வராமல் பாதுகாத்துக் கொள்வது முக்கியமாகும்.

# வடக்குக் கிழக்கில் விளையாட்டுத்துறையை அபிவிருத்தி செய்ய அரசு முன்வரவேண்டும்

## நாடாளுமன்ற உறுப்பினர் சத்தியலிங்கம் கோரிக்கை

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் விளையாட்டுத்துறையை அபிவிருத்தி செய்ய அரசு முன்னுரிமை வழங்க வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சத்தியலிங்கம் கோரிக்கை விடுத்துள்ளார்.

விளையாட்டுத்துறை அபிவிருத்திக்காக நாட்டின் ஏனைய மாகாணங்களுக்கு வழங்கும் முக்கியத்துவத்தை போரால் பாதிக்கப்பட்ட வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்கும் அரசு வழங்க வேண்டும் என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் பத்மநாதன் சத்தியலிங்கம் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் உரையாற்றியபோதே அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவித்தாவது,

தேசிய மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் பங்குபற்றும் இலங்கையைச் சேர்ந்த விளையாட்டு வீரர்களில் எத்தனை பேர் வடக்குக் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை பார்த்தால் ஒரு சில வீரர்களுக்கே அந்த சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

அவர்களுக்கு அந்தச் சந்தர்ப்பம் கிடைத்தற்குக் காரணம் அவர்களின் தனிப்பட்ட திறமையே. இயற்கையாகவே அவர்களுக்கு உள்ள, இருந்த திறமைகள் சில சந்தர்ப்பங்களில் வெளிப்



படுத்தப்பட்டதன் காரணத்தால் அவர்கள் இந்த நிலைக்கு வந்துள்ளார்கள். ஆனால் இந்த அரசில் இருந்து நாங்கள் எதிர்பார்ப்பது என்னவென்றால், இந்த நாட்டில் வாழும் ஏனைய மாணவர்களுக்கு, விளையாட்டு வீரர்களுக்கு கொடுக்கப்படுகின்ற அதே அளவான சந்தர்ப்பத்தை நாடு முழுவதும் உள்ள விளையாட்டு வீரர்களுக்குக் கொடுப்பதற்கு துறைசார்ந்த அமைச்சர் நடவடிக்கை எடுக்கவேண்டும். இது தொடர்பாக அமைச்சரிடமும் பேசியுள்ளேன்.

எமது வடக்கு மாகாணத்தை எடுத்துக் கொண்டால், அரசால் இரண்டு பாரிய விளையாட்டு மைதானங்கள் ஆரம்பிக்கப்பட்டன. ஒன்று கிளிநொச்சியில் மற்றையது வவுனியாவில் முன்னைய ஆட்சியில் ஆரம்பிக்கப்பட்டன. 10 ஆண்டுகளுக்கு மேல் அந்த விளையாட்டு மைதானங்கள் பூரணப்படுத்தப்படாமல் காணப்படுகின்றன. பெருமளவிலான நிதி முதலீடு செய்யப்பட்டுள்ளது. எனினும் இந்த மைதானங்கள் மக்களின் பாவனைக்காக முற்றாக அனுமதிக்கப்படவில்லை

ஆகவே, விளையாட்டுத்துறை அமைச்சர் வவுனியா – ஓமந்தையில் உள்ள விளையாட்டு மைதானத்தையும், கிளிநொச்சியில் உள்ள விளையாட்டு மைதானத்தினதும் கட்டுமானங்களையும் விரைவில் பூரணப்படுத்தி எங்களுடைய பிரதேசங்களில் வாழுகின்ற இளைஞர், யுவதிகள், விளையாட்டு வீரர்கள் தேசிய மட்டத்திலும், சர்வதேச மட்டத்திலும் பங்குபற்றி தமது திறமைகளை வெளிக்காட்டுவதற்கான சந்தர்ப்பத்தை இந்த அரசாங்கம் வழங்க வேண்டும்.

விளையாட்டு என்பது பொழுதுபோக்கு மாத்திரமல்ல. இது சுகாதாரத்துடன் சம்மந்தப்பட்டது. இந்த நாட்டினுடைய பொருளாதாரத்துடன் சம்மந்தப்பட்டது. இது ஒரு நிதி உருவாக்கும் துறை. ஆகையால், நாங்கள் இந்த அரசிடம் எதிர்பார்ப்பது, இந்த விளையாட்டு துறையில் ஏனைய பிரதேசங்களுக்கு வழங்கும் முன்னுரிமை போன்று எமது பிரதேசங்களுக்கும் வழங்குங்கள் என கேட்டுக்கொள்கின்றேன்.– என்றார்.





# கல்முனை பிராந்திய ஆஸ்பத்திரிகளுக்கு கணினி மற்றும் உபகரணங்கள் கையளிப்பு

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைக்கு நேற்று (21) விஜயம் செய்த கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம்.டபள்யூ.ஜீ.திசாநாயக்க பிராந்தியத்தில் உள்ள சில வைத்தியசாலைகளுக்கு கணினி உள்ளிட்ட உபகரணங்களையும் வழங்கி வைத்தார்.

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸதீன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் சிரேஷ்ட உதவி செயலாளர் எஸ்.கரன், நிர்வாக உத்தி



யோகத்தர் எஸ்.எம்.றியாஸ், பிராந்திய பிரிவு தலைவர்கள், வைத்தியசாலைகளின் பொறுப்பு வைத்திய அதிகாரிகள் என பலர் கலந்து கொண்டனர்.

இதேவேளை, சுகாதார அமைச்சின் செயலாளர் பிராந்திய பணிமனையின் சில பிரிவுகளுக்கும் சென்று நிலைமைகளைப் பார்வையிட்டார்.



# கல்முனை பிராந்திய மருத்துவ முகாம் தொடர்பான கலந்தாய்வு

(நூருல் ஹுதா உமர்)

கிழக்கு மாகாண சுகாதார அமைச்சு, அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் ஒத்துழைப்புடன் கல்முனை பிராந்தியத்தில் இலவச மருத்துவ முகாம் ஒன்றை நடத்துவதற்குத் திட்டமிட்டுள்ளது.

இது தொடர்பில் கலந்துரையாடல் ஒன்று நேற்று (21) கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இடம்பெற்றது. கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸதீன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம்.டபிள்யூ.ஜீ.திசாநாயக்க பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

இந்தக் கலந்துரையாடலில் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் எஸ்.கரன், நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.எம்.றியாஸ், பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பிரிவுத் தலைவர்கள், சுகாதார அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் தலைவர்கள், மருத்துவ முகாமுடன் தொடர்புடைய உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

பொத்துவில் கோமாரி மற்றும் திருக்கோவில் பிரதேச மக்களின் நலன் கருதி தாண்டியடி பிரதேசத்தில் குறித்த மருத்துவ முகாமை நடத்துவதற்கு இதன் போது தீர்மானிக்கப்பட்டு, சுகாதார அமைச்சின் செயலாளர் தலைமையிலான குழுவினர் இன்று குறித்த இடங்களுக்குச் சென்று பார்வையிட்டனர்.



# கசிப்பு தயாரித்த இருவர் கைது!

(மஸ்கெலியா)

மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி புஷ்பகுமாரவுக்குக் கிடைக்க பெற்ற இரகசிய தகவல்களை தொடர்ந்து நேற்று முன்தினம் சாமி மலை ஸ்ரஸ்ப்பி தோட்டம் மற்றும் அந்த தோட்டத்தில் உள்ள ஏனைய பிரதேசங்களில் பாரிய சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது. இதன்போது சட்ட விரோதமாகக் கசிப்பு தயாரித்த இருவர் கைது செய்யப்பட்டு ஹட்டன் நீதி மன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து 95 லீட்டர் கோடா மற்றும் கசிப்பு உற்பத்தி செய்யும் உபகரணங்கள் மீட்கப்பட்டன. அவர்களை நீதி மன்றத்தில் ஆஜர்படுத்திய வேளை குற்றவாளிகள் குற்றத்தை ஒப்புக் கொண்ட நிலையில் தலா 15 ஆயிரம் ரூபா தண்டம் பணம் செலுத்த வேண்டும் என நீதிபதி உத்தரவிட்டார்.





# “நிருத்தியார்ப்பணம்” பரதநாட்டிய நிகழ்வு!

(வி.ரி. சகாதேவராஜா)

கல்முனை முத்தமிழ் கலைக்கூடத்தின் “நிருத்தியார்ப்பணம்” பரதநாட்டிய நிகழ்ச்சி காரைதீவு விபுலானந்தா கலாசார மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை (16) கலைக் கூடத்தின் தலைவர் சிவசிறி அடியவன் பிரமின் தலைமையில் நடைபெற்றது.

நடனத்துறையில் பட்டப் படிப்பை பூர்த்தி செய்த செல்விகள் எம். சசீனா, கே.யசோமிதா, கே.லோஜிகா, என் அரணிகா, யு .சம்ருதி ஆகியோர் இந்த நடன நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

பக்கவாத்தியங்களில் நட்டுவாங்கம் ஜி.ஹரன் வாய்ப்பாட்டு எஸ். நரேந்திரா, ஏ.கல்யாண்சரண், மிருதங்கம் . எஸ். லோவிகரன், வயலின் எஸ்.தனுஸ்கரன், புல்லாங்குழல் ஆர். சேதுமாதவன் ஆகியோர் துணை கலைஞர்களாக செயற்பட்டனர்.

நிகழ்வில் கணபதி கீர்த்தனம், புஷ்பாஞ்சலி, கந்த அலாரிப்பூ , ஜதீஸ்வரம், வர்ணம், பதம் கீர்த்தனம், தில்லானா, மங்கலம் ஆகிய கண்கவர் நடனங்கள் மேடை ஏறின.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தர் அழகியல் கற்கைகள் நிறுவன பணிப்பாளர் பேராசிரியர் பாரதி கென்னடி கலந்து கொண்டார்.

கௌரவ அதிதிகளாக நிறுவனத்தின் நடனம் அரங்காற்றுகை திணைக்கள சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி துரைசிங்கம் உஷாந்தி , மட்டக்களப்பு வலயக் கல்விப் பணிமனையின் அழகியல் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி மலர்விழி சிவஞானசோதிகுரு, ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் வித்தகர் விபுலமாமணி வி.ரி. சகாதேவராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

அழைப்பு அதிதிகளாக கல்முனை வலய நடன ஆசிரிய ஆலோசகர் தங்க மாணிக்கம் கலந்து கொண்டார்.

நீண்ட நாள்களுக்குப் பின்னர் சிறப்பானதொரு நடனவிருந்தை அனைவரும் கண்டு களித்தனர்.














# கல்முனை மாநகர சபையின் நிதி உதவியாளருக்குப் பிரியாவிடை!

**(அஸ்லம் எஸ். மௌலானா)**

கல்முனை மாநகர சபையில் நிதி உதவியாளராக கடமையாற்றிய முகாமைத்துவ சேவை உத்தியோகத்தரான யூ.எம். இஸ்ஹாக் தனது 30 வருட கால அரச சேவையில் இருந்து கடந்த 19 ஆம் திகதியுடன் ஓய்வு பெற்றுள்ளார்.

இதனை முன்னிட்டு கல்முனை மாநகர சபையில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த விஷேட சேவை நலன் பாராட்டு விழா கடந்த திங்கட்கிழமை (18) மாநகர சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

கல்முனை மாநகர சபையின் கணக்காளர் ஏ.எஸ். மனாஸிர் அஹ்சன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மாநகர ஆணையாளர் ஏ.ரி. எம். றாபி பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

அத்துடன் கல்முனை மாநகர சபையின் பிரதி ஆணையாளர் ஏ.எஸ். எம். அஸீம், ஆயுள்வேத வைத்திய அதிகாரி ஜுமானா ஹஸீன் ஆகியோர் விசேட அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

சட்டத்தரணி சி.எம்.ஏ. ஹலீம், மாநகர சபையின் வேலைகள் அத்தியட்சகர் பி.ரி.எம். நஹீம், பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் என். பரமேஸ்வர வர்மன், சுகாதாரப் பிரிவு பொறுப்பு உத்தியோகத்தர் ஏ.எம். டிலிட் நௌசாட், அபிவிருத்தி உத்தியோகத்தர்களான ரஜனி சயானந்தன், எஸ். சுபாஷினி, எம்.வை. சாஹிதா உள்ளிட்டோர் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் யூ.எம். இஸ்ஹாக்கின் 30 வருட கால அரச பணியின் உன்னத சேவைகள் குறித்து கருத்துரை வழங்கினர்.

இதன்போது கல்முனை மாநகர சபையின் அனைத்துப் பிரிவுகள் மற்றும் துணை அலகுகள் சார்பிலும் யூ.எம். இஸ்ஹாக், நினைவுப் பரிசில்கள் வழங்கி, பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார். வாழ்த்துப் பாக்களும் கையளிக்கப்பட்டன. கல்முனை மாநகர சபையின் வருமானப் பரிசோதகர் சமீம் அப்துல் ஜப்பார் விழா நிகழ்வுகளைத் தொகுத்து வழங்கினார்.

கல்முனை மாநகர சபைக்கு உட்பட்ட நற்பிட்டிமுனை பிரதேசத்தை சேர்ந்த யூ.எம். இஸ்ஹாக், தேசிய பத்திரிகைகள் மற்றும் இலத்திரனியல் ஊடகங்களின் பிராந்திய செய்தியாளர் என்பது குறிப்பிடத்தக்கது.




















# 20 ஆவது நாளை எட்டியது மன்னாரின் போராட்ட நிலை!

**ஜும்ஆ தொழுகையின் பின்னர் கலந்து கொண்டு ஆதரவு வழங்கிய முஸ்லிம் வர்த்தகர்கள்**

**(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)**

மன்னாரில் காற்றாலை கோபுரங்கள் அமைத்தல் மற்றும் கனிய மணல் அகழ்வு ஆகியவற்றுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டுவரும் கவனவீர்ப்புப் போராட்டம் இன்று வெள்ளிக்கிழமை (22) 20 ஆவது நாளாகவும் சுழற்சி முறையில் முன்னெடுக்கப்பட்டது. போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் மன்னார் பஜார் பகுதியில் உள்ள முஸ்லிம் வர்த்தகர்கள் ஜும்ஆ தொழுகையின் பின்னர் ஒன்று திரண்டு ஆதரவை வழங்கியுள்ளனர்.

மன்னார் மக்கள் மற்றும் இளையோர் ஒன்றிணைந்து முன்னெடுத்து வருகின்ற போராட்டம் இன்று வெள்ளிக்கிழமை 20 ஆவது நாளாகவும் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் பல வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பிப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

மன்னாரில் புதிதாக முன்னெடுக்கப் படவுள்ள காற்றாலை மின் கோபுரம் அமைத்தல் மற்றும் கனிய மணல் அகழ்வு ஆகிய பணிகளை முழுமையாக நிறுத்தும்வரை தமது போராட்டம் தொடரும் என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

இந்தப் போராட்டமானது காலத்தின் தேவை கருதி முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில், போராட்டத்தின் உண்மை நிலையை அறிந்து கொண்டு தாம் ஒத்துழைப்பு வழங்கியுள்ளனர் என்றும் தொடர்ந்தும் தமது ஆதரவு இந்தப் போராட்டக் குழுவுக்குக் கிடைக்கும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

மன்னார் மக்கள் இன, மத வேற்றுமை இன்றி ஒற்றுமையாகப் போராடும் பட்சத்தில் எமது இலக்கை அடைய முடியும் என்று போராட்டத்தில் கலந்து கொண்ட மன்னார் பஜார் பகுதியில் உள்ள முஸ்லிம் வர்த்தகர்கள் தெரிவித்தனர்.











# வளத்தாப்பிட்டி மாணவர்களுக்கு “ஒஸ்கார்” உதவிகள் வழங்கிவைப்பு!

(காரைதீவு சகா)

ஆஸ்திரேலிய காரைதீவு மக்கள் ஒன்றியம், சம்மாந்துறை வலயத்திலுள்ள மிகவும் பின்தங்கிய வளத்தாப்பிட்டி அ.த.க. பாடசாலை மாணவர்களுக்கு ஒரு தொகுதி கற்றல் உபகரணங்களை வழங்கி வைத்தது.

“ஒஸ்கார்” அமைப்பின் தலைவர் கந்தசாமி பத்மநாதனின் வழிநடத்தலில், பொருளாளர் வீ.விவேகானந்தமூர்த்தியின் ஒழுங்கமைப்பில், “ஒஸ்கார்” அமைப்பின் போசகர் பொறியியலாளர் வேலுப்பிள்ளை சிவசுப்பிரமணியம் இந்தத் திட்டத்துக்குப் பூரண நிதியுதவி நல்கினார்.

இந்த நிகழ்வு, வளத்தாப்பிட்டி அதிக பாடசாலையில அதிபர் ஆர் .தர்ஷானந்த் தலைமையில் நடைபெற்றது.

பிரதம அதிதியாக, ஒஸ்கார் அமைப்பின் இலங்கைக்கான செயற்பாட்டுக் குழுத் தலைவர், ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளரும், பிரபல ஊடகவியலாளருமான வித்தகர் விபுலமாமணி வி.ரி. சகாதேவராஜா கலந்து கொண்டார். சிறப்பதிதியாக ஒஸ்கார் பிரதிநிதி ஆசிரியர் ஆர்.இரத்தினகுமார் கலந்து கொண்டார்.

நிகழ்வில் 64 மாணவர்களுக்கு பாடசாலை பைகள் உள்ளிட்ட கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.

“ஒஸ்கார்” அமைப்பின் தலைவர் கந்தசாமி பத்மநாதன் தலைமையிலான ஒஸ்கார் குழுவினர் இன்னொரன்ன பல சேவைகளை காரைதீவில் மட்டுமல்லாமல் அம்பாறை மாவட்ட தமிழ் கிராமங்களில் கடந்த 15 வருடங்களாக செய்து வருகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இம்மாதத்தில் இதுவரை திராய்க்கேணி, மல்லிகைத்தீவு, வளத்தாப்பிட்டி ஆகிய பாடசாலைகளில் உதவி வழங்கப்பட்டுள்ளது. விரைவில் வீரச்சோலை பாடசாலைக்கும் உதவி வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தலைவர் கந்தசாமி பத்மநாதன் தெரி வித்தார்.

இவ் வருடம் அம்பாறை மாவட்ட தமிழ் பிரதேசங்களில் பெருமளவான வேலைத்திட்டங்களை முன்னெடுக்க இருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.



குணம்ஸ் சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998






# பாடசாலையை விட்டு வெளியேறிய இளையோருக்குக் கருத்தரங்கு

பாடசாலையை விட்டு வெளியேறிய ஜே - 329, ஜே - 330, ஜே - 332 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த இளைஞர் யுவதிகளுக்கு, தென்மராட்சிப் பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தி அலகின் ஏற்பாட்டில் தொழில் திறவுகோல் பயிற்சி வழிகாட்டல் கருத்தரங்கு கரம்பகம் பொது நோக்கு மண்டபத்திலும் இடம்பெற்றது.

ஜே - 327,ஜே - 328 ,ஜே - 332, ஜே - 326 ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த இளைஞர் யுவதிகளுகளுக்குக் கொடிகாமம் மத்தி பொது நோக்கு மண்டபத்தில் இந்த வழிகாட்டல் கருத்தரங்கு இடம்பெற்றது.

கொடிகாமம் சமுர்த்தி வங்கி முகாமையாளர் தலைமையில் நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்வுகளுக்கு வளவாளர்களாக பிரதேச செயலக மனிதவள அபிவிருத்தி மற்றும் திறன்விருத்தி உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.




# எல்லோராலும் எம்.ஜி.ஆர். போல் ஆகிவிடமுடியாது
## விஜய்க்கு முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் பதிலடி



எல்லோராலும் எம்.ஜி.ஆர். ஆகி விடமுடியாது என்று முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் தெரிவித்துள்ளார்.

தமிழக வெற்றிக் கழகத்தின் 2 ஆவது மாநில மாநாடு நேற்று மதுரை மாவட்டம் பாரபத்தியில் நடைபெற்றது. வரவிருக்கும் சட்டப்பேரவைத் தேர்தலில் தனது கட்சியின் கூட்டணி நிலைப்பாடு தொடங்கி கொள்கை எதிரி, அரசியல் எதிரி யார், கட்சியின் திட்டம் என்ன என்று பல்வேறு விஷயங்கள் குறித்தும் அக்கட்சியின் தலைவர் விஜய் பேசினார்.

இதில் விஜய் பேசும்போது, "சினிமாவிலும், அரசியலிலும் எனக்கு மிகவும் பிடித்தவர் எம்.ஜிஆர். அவரோடு பழகும் வாய்ப்பு எனக்குக் கிடைக்கவில்லை ஆனால், அவருடைய குணம் கொண்ட இந்த மதுரை மண்ணில் பிறந்த விஜயகாந்த்துடன் பழகும் வாய்ப்பு கிடைத்தது. அவரை என்றும் மறக்க முடியாது. தமிழகத்தில் எம்.ஜி.ஆர் 'மாஸ்' தலைவர். தனது எதிரியைக் கூட கெஞ்ச வைத்தவர் எம்.ஜி.ஆர். ஆனால் அந்தக் கட்சியை இப்போது கட்டிக் காப்பது யார்? அது எப்படி இருக்கிறது. அந்தக் கட்சியின் அப்பாவி தொண்டர்கள் வேதனையில் தவிக்கிறார்கள்." என்றார்.

விஜய்யின் இந்த பேச்சு குறித்து அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் கருத்து தெரிவிக்கையில்,

"எல்லாராலும் எம்.ஜி.ஆர். ஆகிவிட முடியாது. எல்லாராலும் ஜெயலலிதா ஆகிவிடமுடியாது. உலகத்துக்கே ஒரு எம்.ஜி.ஆர். தான். உலகத்துக்கே ஒரு ஜெயலலிதாதான். சிலர் வாக்குகளை பெறவேண்டும் என்ற உத்திக்காக அண்ணாவின் பெயரையும், எம்.ஜி.ஆர், ஜெயலலிதாவின் பெயரையும் பயன்படுத்தலாம். அ.தி.மு.கவுக்கு எம்.ஜி.ஆர். தான் சொந்தக்காரர். எனவே அ.தி.மு.கவின் இரட்டை இலை சின்னத்துக்கு வாக்கு போட்ட கைகள் வேறு எந்த சின்னத்துக்கும் போடாது.

எங்கள் தலைவர்களின் பெயரைச் சொல்லாமல் யாரும் அரசியல் செய்ய முடியாது. ஆனால் அது உங்களுக்கு வாக்குகளாக மாறாது. யார் வேண்டுமானாலும் நாங்கள்தான் அடுத்த எம்.ஜி.ஆர். என்று சொல்லலாம். ஆனால் அதை மக்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்." என்றார்.

# முகவரி இல்லாத கடிதத்துக்கு பதில் போடலாமா?
## விஜய் தொடர்பான கேள்விக்கு கமல்ஹாசன் பதில்



'மார்கெட்' போன பின்னர் அடைக்கலம் தேடி அரசியலுக்கு வரவில்லை என்று விஜய் நேற்று உரையாற்றியிருந்தார்.

இதற்கு, மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவர் கமல்ஹாசன் பதிலளித்துள்ளார்.

தமிழக வெற்றிக் கழகத்தின் 2 ஆவது மாநில மாநாடு நேற்று மதுரை மாவட்டம் பாரபத்தியில் நடைபெற்றது. வரவிருக்கும்

இதில் விஜய் உரையாற்றும் போது, "கூடிய சீக்கிரம் மக்களை சந்திப்பேன். அது இடி முழக்கமாக மாறும். அது போர் முழக்கமாக மாறும். நான் மார்கெட் போன பின்னர் அடைக்கலம் தேடி அரசியலுக்கு வரவில்லை. படைக் கலனுடன் அரசியலுக்கு வந்துள்ளேன். அதுமட்டுமல்ல நான் நன்றிக்கடனுக்காக அரசியலுக்கு வந்துள்ளேன். 30 வருடங்களுக்கு மேலாக என்னை நீங்கள் தான் தாங்கிப் பிடிக்கிறீர்கள்.உங்களுக்காக வருகிறேன். நான் உங்களை மறக்க மாட்டேன்." என்று பேசினார்.

இந்த கருத்து சமூக வலைதளங்களில் வைரலாக பரவி வருகிறது. மேலும் 'மார்கெட்' போன பின்னர் அடைக்கலம் தேடி அரசியலுக்கு வரவில்லை என்று அவர் மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல்ஹாசனைத் தான் குறிப்பிடுகிறார் என்று பலரும் விமர்சித்தனர்.

இந்த நிலையில், சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களை சந்தித்த கமல்ஹாசனிடம் விஜய்யின் இந்த கருத்து குறித்து செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். அதற்கு பதிலளித்த கமல்ஹாசன், "விஜய் யாருடைய பெயரை யாவது குறிப்பிட்டு பேசினாரா? பிறகு அட்ரஸ் இல்லாத லெட்டருக்கு நான் பதில் போடலாமா? அவர் என் தம்பி." என்று தெரிவித்தார்.

# மலையாள நடிகையின் பாலியல் புகார்:
## கேரள காங்கிரஸ் தலைவர் இராஜினாமா



மலையாள நடிகையின் பாலியல் புகார் காரணமாக கேரள இளைஞர் காங்கிரஸ் தலைவர் இராஜினாமா செய்துள்ளார்.

மலையாள நடிகை ரினி ஆன் ஜார்ஜ் நேற்று முன்தினம் கூறுகையில்,

"சமூக ஊடகம் மூலம் என்னுடன் நட்புடன் பழகிய அரசியல்வாதி ஒருவர் எனக்குஆபாசமானசெய்திகளைஅனுப்பி, ஹோட்டல் அறைக்கு அழைத்தார். காங்கிரஸில் இருப்பவர்கள் உட்பட மேலும் பல பெண்களுக்கு இதுபோன்ற அனுபவம் ஏற்பட்டுள்ளது." என்று குற்றம்சாட்டினார்.

அரசியல்வாதியின் பெயரை வெளியிட அவர் மறுத்துவிட்டார். என்றாலும் அது பாலக்காடு எம்.எல்.ஏவும் மாநில இளைஞர் காங்கிரஸ் தலைவருமான ராகுல் தான் என ஊகங்களில் செய்திகள் வெளியாகின.

கடந்த ஆண்டு பாலக்காடு இடைத் தேர்தலில் வென்ற ராகுல் தொடக்கத்தில் இந்தப் புகாருக்கு பதில் அளிக்கவில்லை.

இந்நிலையில் மாநில இளைஞர் காங்கிரஸ் தலைவர் பதவியை ராகுல் நேற்று இராஜினாமா செய்தார். எனினும் பாலக்காடு எம்.எல்.ஏ. பதவியில் அவர் தொடர்கிறார்.

# காசாவில் போரை முடிவுக்குக் கொண்டுவர பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட வேண்டும்

## இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அறிவிப்பு





எஞ்சியுள்ள அனைத்து பணயக்கைதிகளை விடுவிப்பதற்கும், ஏற்றுக்கொள்ளக்கூடிய விதிமுறைகளின் கீழ் காசாவில் போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கும் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அறிவித்துள்ளார்.

பரவலான சர்வதேச மற்றும் உள்நாட்டு எதிர்ப்பையும் மீறி, காசாவின் வடக்கு பகுதியில் பாரியளவிலான தாக்குதல் திட்டங்களுக்கு, தமது அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கமைய, காசாவின் வடக்கில் உள்ள பொதுமக்களையும், சுகாதார அமைப்பினரையும் இடம்பெயருமாறு இஸ்ரேலிய படையினரால் அறிவித்தல் விடுக்கப்பட்டது.

60 நாள் போர் நிறுத்தத்திற்கான கட்டார் மற்றும் எகிப்திய மத்தியஸ்தர்களால் முன்வைக்கப்பட்ட திட்டத்தை ஹமாஸ் ஏற்றுக்கொண்ட நிலையில், நெதன்யாகு அதற்கு இணங்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த பின்னணியிலேயே, இஸ்ரேலில் உள்ள காசா பிரிவின் தலைமையகத்திற்கு நேற்று இரவு விஜயம் மேற்கொண்ட பெஞ்சமின் நெதன்யாகு காணொலி அறிக்கை ஊடாக, தங்களது அனைத்து பணயக்கைதிகளையும் விடுவிப்பதற்கான பேச்சுவார்த்தைகளை உடனடியாக ஆரம்பிப்பதற்கு அறிவுறுத்தியதாகக் கூறியுள்ளார்.



# தென் அமெரிக்காவில் நில அதிர்வு: சுனாமி எச்சரிக்கை குறித்து அவதானம்

தென் அமெரிக்காவில் இன்று 7.5 மெக்னிடியூட் அளவிலான வலுவான நில அதிர்வு ஏற்பட்டதைத் தொடர்ந்து சுனாமி அபாயம் இல்லை என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தென் அமெரிக்காவின் தெற்கு முனைக்கும் அண்டார்டிகாவிற்கும் இடையில் அமைந்துள்ள நீர் நிலையான டிரேக் கடல் பெருவழியில் நில அதிர்வு ஏற்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முன்னதாக, நில அதிர்வு 8.0 மெக்னிடியூட் அளவில் பதிவானது, ஆனால் பின்னர் அமெரிக்கப் புவியியல் ஆய்வு மையம் அதை 7.5 ஆகக் குறைத்தது.

சேதம் குறித்த தகவல்கள் எதுவும் இதுவரை இல்லை என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

புதன்கிழமை மாலை பேஸ் ஃப்ரீயிலிருந்து வடமேற்கே 258 கிலோ மீற்றர் (160 மைல்) தொலைவில் ஏற்பட்ட 8.0 மெக்னிடியூட் அளவிலான நில அதிர்வைத் தொடர்ந்து, சிலியின் கடற்படை நீர்வரைவியல் மற்றும் கடல்சார் சேவை சிலி அண்டார்டிக் பிரதேசத்திற்கு சுனாமி முன்னெச்சரிக்கை வெளியிடப்பட்டதாக ஒரு செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பாப்பரசர் பதினான்காம் லியோ லெபனானுக்கு முதல் பயணம்



பாப்பரசர் பதினான்காம் லியோ, தனது முதல் வெளிநாட்டு பயணமாக லெபனான் நாட்டுக்குச் செல்வதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

அமெரிக்காவைச் சேர்ந்த முதல் பாப்பரசர் பதினான்காம் லியோ தனது முதல் வெளிநாட்டு பயணமாக, லெபனான் நாட்டுக்குச் செல்வார் என அந்நாட்டைச் சேர்ந்த கர்தினல் பெச்சாரா பெளட்ரஸ் ராய் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து, சவூதி அரேபியாவைச் சேர்ந்த தொலைக்காட்சிக்கு அவர் அளித்த பேட்டியில்,

“பாப்பரசர் பதினான்காம் லியோ விரைவில் லெபனான் நாட்டுக்கு பயணம் மேற்கொள்வார். இருப்பினும், அந்தப் பயணம் எப்போது என்பது இன்னும் முடிவு செய்யப்படவில்லை.

ஆனால், வரும் டிசம்பர் மாதத்திற்குள் அவர் எப்போது வேண்டுமானாலும் தனது பயணத்தைத் துவங்கலாம். இதுகுறித்து, வாடிகன் அரசுதான் தெரிவிக்க வேண்டும். அதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.” என அவர் கூறியுள்ளார்.

பக்கங்கள் - 03

# கனடா முரசு

வெள்ளிக்கிழமை 22/08/2025

## கனனாஸ்கிஸ் பகுதியில் ஆணின் சடலம் மீட்பு



C3▸




# பயணிகளுக்கு நட்டஈடு வழங்க எயார் கனடா நிறுவனம் தீர்மானம்

எயார் கனடா விமான சேவை நிறுவனம் தனது பயணிகளுக்கு நட்டஈடு வழங்குவதாக அறிவித்துள்ளது.

விமானப் பணியாளர்கள் வேலை நிறுத்தத்தால் பாதிக்கப்பட்ட பயணிகளுக்கு ஹோட்டல், உணவு, தரைவழி போக்குவரத்து மற்றும் பிற செலவுகளை ஈடு செய்ய உறுதியளித்துள்ளதாக தெரிவித்துள்ளது.

கடந்த வியாழக்கிழமை வெளியிடப்பட்ட அறிவிப்பில், ஓகஸ்ட் 15 ஆம் திகதி முதல் இடம்பெற்ற தொழிற்சங்கப் போராட்டத்தினால் பயணங்கள் ரத்து செய்யப்பட்ட அல்லது தாமதமான

C2▸




# கனடாவில் குடியிருப்பாளரை அதிரவைத்த நீர்க்கட்டணம்



கனடாவின் வின்னிபெக் நகரில் வசிக்கும் வனேசா பாக்கியோ என்ற வீட்டு உரிமையாளர், தனது வீட்டுக்கான நீர்க்கட்டணத்தைப் பார்த்து அதிர்ச்சியடைந்துள்ளார்.

மேற்படி நபரின் நீர்க் கட்டணம் 21000 டொலர்கள் என அறிவிக்கப்பட்டதனால் இவ்வாறு அதிர்ச்சிக்கு உள்ளார் என தெரிவித்துள்ளார்.

இந்தக் கட்டணத்தை நம்ப முடியவில்லை எனவும் இது மிகப்பெரிய தொகை எனவும் தெரிவித்துள்ளார்.

வழமையாக மூன்று மாத இடைவெளியில் 300 முதல் 800 டொலர் கட்டணம் செலுத்த நேரிடும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் 2025 ஜுலை மாத நீர் கட்டண பட்டியல் 21727.71 டொலர் என அறிவிக்கப்பட்டுள்ளது. நீர் மானி வாசிப்பின் அடிப்படையில் இந்த கட்டண அறவீடு குறித்து நகராட்சி அறிவித்துள்ளது.

எனினும் நகராட்சி நிர்வாகம் உரிய முறையில் கட்டண அறவீட்டை மேற்கொள்ளத் தவறியுள்ளதாக குற்றம் சுமத்தியுள்ளார்.

# வீட்டிற்குள் நுழைந்த மர்ம நபரை கடுமையாகத் தாக்கிய உரிமையாளர்



கனடாவில் அதிகாலையில் வீட்டிற்குள் நுழைந்த மர்மநபரை கடுமையாக தாக்கிய வீட்டு உரிமையாளர் குற்றச்சாட்டுகளை எதிர்கொண்டுள்ளார்.

ஒன்ராறியோவின் லிண்ட்சேயில் வசிக்கும் 44 வயது நபர் ஒருவர், அதிகாலை 3 மணியளவில் மர்ம நபர் தனது வீட்டிற்குள் ஊடுருவதைக் கண்டுள்ளார்.

உடனே அந்நபரை வீட்டின் உரிமையாளரான 44 வயது நபர் கடுமையாக தாக்கியுள்ளார்.

இதில் மர்ம நபர் உயிருக்கு ஆபத்தான காயங்களுக்கு ஆளானதால், டொராண்டோவில் உள்ள மருத்துவமனைக்கு கொண்டுசெல்லப்பட்டார்.

இதற்கிடையில் கவர்தா லேக்ஸ் பொலிஸ், வீட்டிற்குள் நுழைந்த நபரை தாக்கிய வீட்டு உரிமையாளரை கைது செய்தனர்.

அவர் மீது கடுமையான தாக்குதல் மற்றும் ஆயுதத்தால் தாக்கியதாக குற்றஞ்சாட்டப்பட்டது. பின்னர் அவர் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டு விடுவிக்கப்பட்டார்.

இந்த நிலையில் தாக்குதலுக்கு உள்ளான சந்தேக நபர், ஏற்கனவே பொலிஸாரால் தேடப்பட்டு வந்தவர் என்பதனால், மருத்துவமனையில் இருந்து வெளியேற போதுமான அளவு குணமடைந்ததும் காவலில் எடுக்கப்படுவார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.




**பயணிகளுக்கு...**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வாடிக்கையாளர்களுக்கு நியாயமான தங்குமிடம் மற்றும் ஏனைய செலவுகளை எயார் கனடா ஈடு செய்யும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பயணத் திட்டங்கள் பாதிக்கப்பட்ட அனைத்து வாடிக்கையாளர்களிடமும் நாங்கள் மனமார்ந்த மன்னிப்பு கோருவதாக அறிவித்துள்ளது.

மேலும் பயணத்தின் போது தவிக்கப்பட்டவர்களுக்கு உரிய நிவாரணம் வழங்குவதற்கு நாங்கள் உறுதிபூண்டுள்ளோம் என எயார் கனடா தெரிவித்துள்ளது.

இந்த இழப்பீடு கோரிக்கைகள் ரசீதுகளுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.




# கனனாஸ்கிஸ் பகுதியில் ஆணின் சடலம் மீட்பு

கனடாவின் கனனாஸ்கிஸ் பிராந்தியத்தின் உள்ள பேரியர் ஏரியில் நீரில் மூழ்கிய ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

படகு கவிழ்ந்ததில் மேற்படி நபர் தண்ணீரில் மூழ்கியதில் இந்த நபர் உயிரிழந்துள்ளார்.

கல்கரியைச் சேர்ந்த 30 வயது ஆண் மற்றும் சீனாவிலிருந்து வந்திருந்த அவரது பெற்றோர் இந்தப் படகில் பயணம் செய்துள்ளனர்.

இந்த விபத்தில் படகில் பயணம் செய்த 60 வயது ஆண் ஒருவர் இறந்த நிலையில் கண்டெடுக்கப்பட்டுள்ளார்.

இந்த படகு கவிழ்ந்த விவகாரத்தில் குற்றச் செயல்கள் இடம்பெறவில்லை என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சீரற்ற காலநிலையினால் இந்த விபத்து இடம்பெற்றிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

காற்று மற்றும் அலையினால் படகு கவிழ்ந்திருக்கலாம் என நம்பப்படுகின்றது.

சில இடங்களில வானிலையில் திடீரென மாற்றங்கள் ஏற்படும் எனவும் இது குறித்து மக்கள் போதியளவு விளக்கத்துடன் இருக்க வேண்டுமென வும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

# பாலியல் குற்றச் செயல் மருத்துவர் ஒருவர் கைது

கனடாவில் நியூ பிரன்ஸ்விக் மாகாணத்தில் நோவா ஸ்கோஷியாவில் மருத்துவர் ஒருவர் பாலியல் குற்றச் செயலில் ஈடுபட்டுள்ளார் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

மேற்படி மருத்துவமனையில் கடந்த ஜனவரி மாதம் இந்த சம்பவம் இட்மபெற்ற தாக கூறப்படுகின்றது.

கடந்த மே மாதம், நோவா ஸ்கோஷியாவின் அப்பர் நப்பன் பகுதியில் உள்ள கம்பர்லேண்ட் பிராந்தியத்தில் ஹெல்த் கேர் சென்டரில் ஒரு மருத்துவர் மீது பாலியல் வன்கொடுமை முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவில் நோயாளி பரிசோதனையின் போது இந்த சம்பவம் நடந்ததாகக் கூறப்படுகிறது. இந்த குற்றச்சாட்டின் பேரில் சஞ்ஜீவ் சிர்பால் என்ற மருத்துவர் ஓகஸ்ட் 14 அன்று கைது செய்யப்பட்டுள்ளார்.

பாலியல் வன்கொடுமை குற்றச்சாட்டில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.




கைது செய்யப்பட்ட மருத்துவர் நிபந்தனைகளுடன் விடுவிக்கப்பட்டதுடன், நோவா ஸ்கோஷியாவின் அம்ஹெர்ஸ்ட் நீதிமன்றத்தில் நவம்பர் 15 ம் திகதி மீண்டும் முன்னிலையாக வேண்டுமென உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்த மருத்துவரின் மூலம் மேலும் பாதிக்கப்பட்டவர்கள் இருக்கலாம் என்று நம்புவதாகத் தெரிவித்துள்ளனர்.

பொலிஸாரின் கூற்றுப்படி, இவர் முன்னதாக கியூபெக் மற்றும் நோவா ஸ்கோஷியாவில் பணிபுரிந்தவர் மற்றும் தற்போது நியூ பிரன்ஸ்விக் மாகாணத்தில் பணிபுரிகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.